**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.736/2010 பி.வா.சா.3 மருதாசலம்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 03.02.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) என் சொந்த ஊர் கொண்டம்பட்டி என காண்பிக்கும் ஆவணம் ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஊரில் என் பெற்றோர் பூர்வீக வீடு இருந்ததாக கூறும் நிலையில் அதனை காண்பிக்கும் ஆவணம் ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஸ்ரீ தண்டாயுதபாணி ரைஸ் அண்ட் ஆயில் மில்லில் வேலை பார்த்ததாக கூறும் நிலையில் அதனை காண்பிக்கும் ஆவணம் ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் என் பிரமாண வாக்குமூலத்தில் 1981 ல் இருந்து மில்லில் பணிபுரிவதாக கூறிவிட்டு 2ம் பிரதிவாதி குறுக்குவிசாரணையில் 1986 ல் இருந்து அங்கு வேலை பார்ப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் அங்கு வேலைக்கு சேர்ந்த சமயம் 9ம் வகுப்பு படிப்பை நிறுத்துவிட்டு சேர்ந்ததாக 2ம் பிரதிவாதி குறுக்குவிசாரணையில் கூறினேன் என்றால் சரிதான்.

2) நான் பிறந்த தேதி 03-04-1964 என்றால் சரிதான். அவ்வாறு எனில் 1981 ல் எனக்கு 18 வயது முழுமை அடைந்து இருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு எனில் 1986 ல் எனக்கு 23 வயது முழுமை அடைந்து இருக்கும் என்றால் சரிதான். நான் 9ம் வகுப்பு படிப்பை நிறுத்துவிட்டு மேற்படி மில்லில் வேலைக்கு சேர்ந்ததாக சொல்வது பொய் என்றும் நான் ஒருபோதும் அங்கு பணியாற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

3) வழக்கு சொத்தை கிருஷ்ணசாமி தனித்து கிரையம் பெற்றதாக சொல்வது தவறு என்றும் அவரது சகோதரர்களுடன் சேர்ந்து தான் அவர் கூட்டாக கிரையம் பெற்றார் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி மில்லை கிருஷ்ணசாமி மற்றும் அவரது மனைவி தனித்து நிர்வகித்ததாக சொல்வது தவறு என்றும் அவரது சகோதரர்களுடன் சேர்ந்து தான் அவர் கூட்டாக நிர்வகித்தார் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் கிருஷ்ணசாமி தனித்து மதில் சுவர் மற்றும் களம் அமைக்க செலவு செய்ததாக சொல்வது தவறு என்றும் அவரது சகோதரர்களுடன் சேர்ந்து தான் அவர் கூட்டாக செலவு செய்து அவற்றை அமைத்தார் என்றும் சொன்னால் சரியல்ல.

4) வழக்கு சொத்தின் கிரைய பத்திரத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் யார் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்து கிருஷ்ணசாமி மற்றும் அவரது சகோதரர்களுக்கு கூட்டாக கிரைய படி பாத்தியப்பட்டது என்றும் அதனை மறைத்து வாதிகளுக்கு வழக்கு சொத்தில் பாகம் கோர உரிமை இல்லை என நான் 2, 5, 6, 7 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம் /-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி